# தென்னாசிய சாஸ்திரீய நடன பாரம்பரியங்களில் இலங்கையில் நாட்டிய/சாஸ்திர மரபு

ம. பால கைலாசநாத சர்மா,
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

## (i) நடனக் கலையின் அறிமுகம்

மனித வரலாற்றிலே கலைகள் ஒரு முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளன. அவை மக்கள் வாழ்வினை வளம்படுத்தியும் செம்மைப்படுத்தியும் சந்தோஷப்படுத்தியும் வந்துள்ளன. கலையறிவானது மக்களுக்கு மனிதப் பண்பினையும் கலாசார விழுமியங்களையும் வளர்க்க உதவுவன. ஆதிகாலம் தொட்டுத் தமிழர் வாழ்விலே கலைகள் ஒன்றிணைந்து விளங்கி வந்துள்ளன. மனிதர் மாக்கள் (மிருகங்கள்) போல அலைந்து திரிந்த மிகப்புராதன காலத்தில் கூட ஒருவகையான நடனக்கலை தோன்றிவிட்டது. புராதன மனிதனின் அசைவு நெளிவுகளிலிருந்து நடனம் ஏற்பட்டுவிட்டது. இத்தகைய நடனம் அல்லது நடனக்கலை உலகின் பல்வேறு பாகங்களிலும் நிலவிவந்தது.

## (ii) கலைகளின் தோற்றம்

புராதன காலத்தில் ஆற்றோரங்களிலே முகிழ்த்த சுமேரிய, எகிப்திய, இந்திய, சீன நாகரிகங்களிலே நடனக்கலை பிரபல்யம்பெற்று முக்கியமான இடத்தினை பெற்றிருந்தது இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்துவந்த மனிதகுலத்தின் ஒரு சிறந்த வெளிப்பாடே கலைகள் என்று குறிப்பிடலாம். இசை நடனம் ஆகிய கலைகளின் தோற்றமும் தொன்மைக்காலத்துக்கு இட்டுச் செல்கின்றது.

கலையினைக் குறித்துவரும் ஆங்கிலச் சொல்லான "Art" என்னும் சொல்லிற்கு "திறமை" எனும் ஒரு பொருளும் உண்டு. திறமை என்ற வரையறையுள் நின்றே கவின் கலைகளான இசை, நடனம், என்பன ஆரம்பத்தில் தோற்றம் பெற்றன. அத்துடன் தமிழுக்குரிய பண்ணிசை கர்நாடக இசை, பரதநாட்டியம் ஆகிய சாஸ்திரிய அல்லது செந்நெறிக்கலைகளும் அவற்றிற்கு முன்னோடிகளான நாட்டார் இசை கூத்து வடிவங்களும் குறிப்பிடற்பாலன.

## (iii) தென்னாசியா

தென்னாசியா புவியியல் ரீதியிலே குறிப்பிடத்தக்க தனித்துவமுள்ள பெரு நிலப்பரப்பு மட்டுமன்று, பல்வேறு வகையான புவியியல் அமிசங்கள் இனங்கள், மதங்கள் சமூகப்பண்பாட்டுக் கூறுகள் முதலியனவற்றை கொண்டிலங்கினாலும் அடிப்படையிலே புவியியல் ரீதியிலும், சமய சமூக பண்பாட்டு ரீதியிலும் சில குறிப்பிடத்தக்க பொதுவான அமிசங்களையும், சிறப்பான அமிசங்களையும் கொண்டு விளங்கும் ஒரு பெருநிலப்பரப்பாகும். "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற குறிக்கோள் இப்பிராந்தியத்திற்குரிய ஒரு தனிச்சிறப்பான அமிசமாகும்.

இப்பிராந்தியத்திலே இன்றைய இந்தியக் குடியரசு பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், சிக்கிம், பூட்டான், இலங்கை, மாலைதீவுகள் ஆகிய ஆசிய நாடுகள் உள்ளன. சிலர்

ஆப்கானிஸ்தானையும் இவற்றுடன் சேர்த்துக்கொள்வர். இந்நாடுகளிற் பல 1947க்கு முன் இந்தியாவில் அடங்கியிருந்தன. மேலும் இப்பிராந்தியத்தின் மையத்திலுள்ள பெரிய நாடாக இந்தியக் குடியரசு விளங்குகின்றது. வரலாற்று ரீதியிலே பிரிக்கப்படாத இந்தியத்துணைக்கண்டம், "பாரதம்", "இந்தியா" எனவும் வழங்கப்படலாயிற்று.

## (a) கூட்டுக்கலை.

பாடல், இசை, வாத்தியம் (தாளம்), ஆடல், நடிப்பு, ஒப்பனை எனப் பல கலைகளை உள்ளடக்கிய கூட்டுக்கலையாக நடனம் தென்னாசியாவில் ஆரம்ப காலங்களில் வளர்ந்துள்ளது. தென்னாசியாவின் வெவ்வேறுபட்ட பகுதிகளில் பல்வேறுபட்ட கலைகள் இன்றும் தொடர்ந்து நிலவுகின்றன. இவற்றிலே காலப்போக்கிலே செம்மைப்படுத்தப்பட்ட சாஸ்திரிய நடனங்களாக அவ்வப்பகுதிகளுக்குச் சிறப்பானவையாக இந்தியக் குடியரசிலே தமிழ்நாட்டிற்குரிய பரதநாட்டியம், கேரள மாநிலத்திற்குரிய கதக்களி (நடன – நாடகம்), வட இந்தியாவின் நடுப்பகுதி, மேற்குப் பகுதிகளுக்குரிய கதக், ஒரிசாவிற்குரிய ஒடிசி, வட இந்தியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள மணிப்புரி நடனம், இலங்கையிலே கண்டிய நடனம் முதலியன நன்கு குறிப்பிடத்தகன. இவற்றைவிட கேரளத்திலே நிலவும் மோஹினியாட்டம், ஆந்திராவிலே குச்சுப்புடி, கர்நாடகத்திலே யக்ஷகானம், செரக்கெல்லாவிலே சௌ முதலியனவும் குறிப்பிடற்பாலன. இந்நடனங்கள் அனைத்தும் அவ்வவ்விடங்களிலே நிலவிவந்த கிராமிய நடனங்களின் செம்மைப்படுத்தப்பட்ட கலை வடிவங்கள் எனப் பொதுவாகக் கொள்ளப்படும். இந்நடனங்கள் அனைத்திற்கும் பொதுவான அமிசங்களும், அவற்றிற்குரிய தனிச்சிறப்பான அமிசங்களும் உள்ளன

பொதுவான அமிசங்களிலே சாஸ்திரம் சமயத்தொடர்புகள் முதலியன கவனித்தற்பாலன. இச்சாஸ்திரீய நடனங்கள் அனைத்திற்கும் பொதுவாக நாட்டிய சாஸ்திரமே முதனூலாகக் கொள்ளப்படுகின்றது.

## (b) பரதநாட்டியத்தின் தொடக்கநிலை

நடனக்கலை அல்லது பரதக்கலையின் தொடக்க நிலையானது பிறநாடுகளிற்போன்று இந்தியாவிலும் படிமுறையாக வளர்ச்சியுற்றது. இந்திய சாஸ்திரீய இசைபோன்று சாஸ்திரீய நடனமும் தொடக்கத்தில் ஒன்றாகவே இலங்கியது. காலம் செல்லப் பிராந்திய வேறுபாடுகளினடிப்படையிலேற்படும் வளர்ச்சி, பிற பண்பாட்டுத்தாக்கம் முதலியவற்றாலே பல்வேறு நடனங்கள் தோன்றின. இவற்றுள்ளே குறிப்பாக பரதநாட்டியம் மிக்க கவர்ச்சிகரமான நடனக்கலையாக விளங்கிவந்தது.

தற்போது தமிழ்நாட்டினை மையமாகக் கொண்டு திகழ்ந்தாலும் இந்தியா அனைத்திற்கும் பொதுவான நுண்கலை வடிவங்களில் இது சிறப்பு வாய்ந்தது. இந்நடனத்திற்குரிய முக்கியமான பல நூல்கள் இந்தியப் பண்பாட்டுப் பொது மொழியான சமஸ்கிருத மொழியில் இருப்பதும் நன்கு குறிப்பிடற்பாலது. கலையின் வெளிப்பாட்டினாலேற்படும் கவர்ச்சியினால் ரஸிகர்களின் உள்ளம் நன்கு மகிழ்ச்சியடையாவிடின் உண்மையாகக் கலையழகு ஏற்படாது என அலங்கார "ராகவன்" கூறியிருப்பது பரதக் கலைக்கும் நன்கு பொருந்தும்.

பரதநாட்டியத்தின் சிறப்பினை "லேபியன் பவோ்ஸ்" என்னும் மேனாட்டுக் கலாவிமர்சகர் "பரதநாட்டியம் இந்தியாவின் தலைசிறந்த நடனம் மட்டுமன்றி, நீண்ட காலச் சாஸ்திரீயச் சிறப்பும் வாய்ந்ததாகும் எனவும் இந்திய நடனங்களிலே பெருமிதமுடையதும் பாரநாட்டியமே" (Bharath Natya is the pride of Indian Dance) எனவும் பாராட்டியுள்ளார்.

## (c) பரத எனும் சொல் விளக்கம்.

பரத எனும் சொல் நாடகம், நடனம் எனும் பொருளிலும் வந்துள்ளது. நாட்டிய சாஸ்திரமே பரதசாஸ்திரம், பரத சூத்திரம், பரதம் எனவும் அழைக்கப்படுதல் ஈண்டு கவனித்தற்பானது. மேலும் பரத என்ற சொல் நடிகன், ஆடுபவன் முதலியோரைக் குறித்துப் பின் இந்நூலை ஆக்கியோன் அல்லது தொகுத்தவனைக் குறித்திருக்கலாம். இச்சொல் மேலும் நாடகக்குழு நாடகத்தினைத் தொழிலாகக் கொணடவன் முதலியோரையும் குறிக்குமென்பது நாட்டிய சாஸ்திரம் மூலம் அறியப்படும். இந்நூலிலே பல பாத்திரங்களாக நடித்தும் இசைவாத்தியங்களை இசைத்தும் நாடகத்திற்கான பலவற்றையும் ஏற்படுத்தி நாடகத்தின் தலைவனாக நின்று நடத்துபவனே பரதன் எனக் கூறப்படுகின்றது. நடனம், நாடகம் தயாரிப்பவர்கள், கற்பவர்கள் முதலியோருக்கான கைந்நூலாக பரதநாட்டிய சாஸ்திரம் பரத முனிவரால் கி.பி. 2ம் நூற்றாண்டளவிலே எழுதப்பட்டிருக்கலாம் அல்லது தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

(d) தென்கிழக்காசிய நாடுகளில் நாட்டிய சாஸ்திரமரபின் தாக்கம் என்று கூறும்படி பரத முனிவரைத்தொடர்ந்து கோஹலர், மதங்கர், நாரதர், தத்திலயர், தனஞ்ஜயர், நந்திகேஸ்வரர், சாரங்கதேவர் முதலியோர் நாட்டியம் பற்றியும் எழுதியுள்ளனர். இம்மரபு பற்றிய சமீபகாலம்வரை நூல்கள் பிராந்திய ரீதியாகவும் எழுதப்பட்டு வந்துள்ளன. இவையாவும் வடமொழியாலே எழுதப்பட்டு வேறுபாடுகளைக் கடந்து ஒரு பொதுத்தன்மையும் ஏற்பட்டது. இவ்வாறு உருவாகி வடிவம் பெற்ற நாட்டிய சாஸ்திர மரபின் சொல்வாக்கு சமஸ்கிருத இலக்கியங்கள், தென்னாசியாவின் பிராந்திய மொழிகளிலுள்ள இலக்கியங்கள், நாடகம், நடனம், இசை, சிற்பம், ஓவியம், அழகியல் முதலிய பல அறிவியல் துறைகளிலும் ஏற்பட்டது.

பரதரின் நாடடிய சாஸ்திரமானது இந்தியப் பிராந்தியங்கள் அனைத்துக்கும் பொதுவாக எழுதப்பட்ட நூலாகையால் ஏனைய பிராந்தியங்களில் உள்ள கலைகளும் இதன் சாயலைப் பெறக்கூடியதாக இருந்தன. இக்கலைகளுக்குத் தொல்சீர்க்கலை, செந்நெறிக்கலை (Classical Art) எனும் முத்திரை பொறிப்பதற்கு நாட்டிய சாஸ்திரத் தொடர்பு அவசியமாகும்.

எனவே ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் சாஸ்திரீய மயமாக்கப்பட சில நடனங்கள், நாட்டிய நாடகங்கள், நாட்டிய சாஸ்திரத் தொடர்பை எடுத்திக்காட்டிச் சாஸ்திரீயத்தன்மை பெற்றுள்ளன. அத்துடன் பிரதேசவாரியான கலைகளின் தனித்துவம் அவ்வப்பிராந்தியங்களில் உருவாகிய கலைகளிலே பிரபல்யமாக இடம்பெறுதலும் ஊக்குவிக்கப்பட்டது. மேலும் நாட்டிய சாஸ்திர மரபின் தாக்கம் கடல்கடந்து இலங்கை, தென்கிழக்காசிய நாடுகளிலும் ஏற்பட்டது. இவ்வாராய்சிக் கட்டுரையிலே இலங்கையில் நாட்டிய சாஸ்திர மரபானது எந்தளவுக்கு சாஸ்திரீய நடன பாரம்பரியல்களினூடாக ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

## (iv) இலங்கையில் நாட்டிய சாஸ்திர மரபு

இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளிலும் நாட்டிய சாஸ்திரமரபு பரவியுள்ளது. இலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்பட்டிருப்பினும் தென்கிழக்கு ஆசியா போலன்றி அதன் எச்சங்கள் ஒப்பீட்டு ரீதியில் இங்கு குறைவாகவே காணப்படுகின்றன. இலங்கையிலே பௌத்தம், இந்துசமயம் ஆகிய இரு மதங்களும் முறையே பொதுவாகச் சிங்களவர், தமிழர் ஆகியோரால் பின்பற்றப்பட்ட காரணத்தினாலோ அல்லது வேறு காரணங்களாலோ

இசை நடன மரபுகள் புராதன காலத்திலே (சுமார் கி.பி. 11ம் நூற்றாண்டு வரை) நன்கு வளர்ச்சியடைந்திருந்தமைக்குப் போதிய சான்றுகள் இல்லை.

ஆனால் கி.பி பதினொராம் நூற்றாண்டில் சோழப்பொருமன்னர் ஆட்சி தொடக்கம் இசை, நடனம் பற்றிய இலக்கியக் குறிப்புகளும் சிற்பம், ஓவியம் முதலியனவும் நன்கு காணப்படுகின்றன. குறிப்பாக சோழராட்சியின்போது பெரும்பாலும் ஆதரிக்கப்பட தமிழிசை நடன மரபுகள் தொடர்ந்து ஆட்சிபெற்ற சிங்கள மன்னர் ஆட்சிக்காலங்களில் ஓரளவாவது பின்பற்றப்பட்டன. பின்னர் கி.பி. 13ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாவது பாண்டியப் பேரசு அதைத் தொடர்ந்து ஏற்பட்ட விஜயநகரப்பேரரசு, நாயக்க அரசுத் தொடர்புகளால் மேற்குறிப்பிட்ட இசை, நடன மரபுகள் மேலும் வலுப்பெற்றன.

முதலாவது பராக்கிரமபாகு (கி.பி. 1153 – 1186) தலைநகரான பொலநறுவையிலே சரஸ்வதி மண்டபத்தை நிறுவி அங்கு இசை, நடனம் ஆகியனவற்றைப் போற்றி வளர்த்தான். இசை, நடனம் ஆகியனவற்றை வளர்ப்பதற்காக இலங்கையிலே நிறுவப்பட்ட முதலாவது நிறுவனம் இது எனக் கருதப்படுகின்றது. இவ்வரசனுடைய பட்டத்தரசியான லீலாவதி நடனக் கலையிலே வல்லுநராக விளங்கினாள். எனவே இந்தியாவைப்போன்று இங்கும் அரச குடும்பத்தினர் சிலராவது இசை, நடனம் முதலிய நுண்கலைகளிலும் வல்லுநராக விளங்கினர் எனலாம்.

கி.பி. 11ம் நூற்றாண்டு தொடக்கம் போர்த்துக்கீசர் ஆட்சி ஏற்படும் வரையாவது (கி.பி. 16ம் நூற்றாண்டு) தென்னிலங்கையிலே குறிப்பாகத் தென்னிந்திய நடனம் அதாவது பரதநாட்டியம், இசை மரபுகள் நிலவியது பற்றிச் சமகால பாளி, குறிப்பாகச் சிங்கள மொழியிலுள்ள சந்தேச இலக்கிய நூல்களும் கூறுவனவற்றை ஓரளவாவது சமகாலச்சிற்பங்களும், ஓவியங்களும் உறுதிப்படுத்துகின்றன. இவைபற்றிப் பேராசிரியர் சரச்சந்திரா குறிப்பிட்டுள்ளார்.

சூளவம்சத்திலே முதிங்க, காகலமத்தளம், வீணை முதலிய இசை வாத்தியங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. தூபவம்சம், தளதசிரித (கி.பி 13 – 14 நூற்றாண்டு) ஆகிய நூல்களிலே பெருந்தொகையான இசை வாத்தியங்களின் இரு பட்டியல் உள்ளன. அவற்றுட் பல இந்திய இசை வாத்தியங்களாகும். மேலும் இக்காலப்பகுதியிலே சிங்கள மன்னர் சபையிலும் தென்னிலங்கையிலிருந்த தேவாலயங்களிலும் இசை, குறிப்பாக நடனம் (பரதநாட்டியம்), சமகாலத் தென்னிந்திய அரசுகளின் காலம் போன்று நிலவியதற்கான இலக்கிய, தொல்லியற்சான்றுகள் உள்ளன. இலங்கையின் பல இடங்களிலே, குறிப்பாக வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளிலே வாழ்ந்த தமிழரிடையிலே சமகாலத்தமிழகத்திற்போன்று இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நிலவி எனலாம்.

ஆனால் கி.பி. 16ம், 17ம் நூற்றாண்டுகளிலேற்பாற்பட்ட போர்த்துகீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் படையெடுப்புக்களாலும், அவர்கள் ஆட்சியின்போது பின்பற்றப்பட் சுதேசக் கலையழிவுக் கொள்கையாலும் கரையோரப் பிரதேசங்களிலும் இந்துக் கோவில்களும், ஸ்தூபிகளும், பிற வழிபாட்டுச் சின்னங்களும், அவை சார்பான கலைகளும் அழிவுற்றன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் கோயிற்கலைகளாகவே பெரும்பாலும் இந்துக்களிடையே நிலவிவந்தன.

## (v) இலங்கையில் நடன சிற்பங்கள்.

இன்று இலங்கையில் கிடைத்துள்ள காலத்தால் முந்திய நடன சிற்பங்கள் பெரும்பாலும் பொலநறுவ காலத்தவையும், அதற்குப் பிற்பட்ட காலத்தவையுமே (கி.பி 10ம் நூற்றாண்டுக்குப் பின்) ஆகும். கி.பி. 11ம் நூற்றாண்டினைச் சேர்ந்த வெண்கலத்தாலான நடராஜ சிலைகள், நர்த்தன கிருஷ்ணன் சிலை முதலியன குறிப்பிடற்பாலன. அண்மைக்காலத்திலே கலாசார

முக்கோண அகழ்வாய்வின்போது, அநுராதபுரத்தில் உள்ள அபயகிரி விகாரைப் பகுதியிலே நடன நிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலையொன்று கிடைத்துள்ளது. சிவன். சக்தி, தாண்டவம், லாஸ்யம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய இச்சிலை நன்கு ஆய்தற்குரியது. யாப்பகூவ, கடலதெனியா ஆகிய இடங்களிலுள்ள போதிகைச் சிற்பங்களிலும் எம்பெக்கி தேவாலயத்திலுள்ள மரச்சிற்பங்களிலும் பரதர் கூறும் நாட்டிய நிலைகளிலே நடனமாதர் வடிவங்கள் காணப்படுகின்றன. யாப்பகூவவில் உள்ள நடன சிற்பங்கள் புகழ் பெற்ற சிதம்பரம் கோயிலில் உள்ள நடன சிற்பங்களை ஒத்துள்ளன. இவற்றிலே நடராஜ, சதுர, கரிஹஸ்த, கண்டசூசி, நிகுஞ்சித நடன நிலையிலுள்ளவை குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிடச் சமகாலத்திய வேறு சிற்பங்களிலும், ஓவியங்களிலும் சாஸ்திரிய நடன நிலைகளைக் காட்டும் பல நடனமாதர் காணப்படுகின்றனர். டெடிகமவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட விளக்கில் உள்ள நடனமாதும் சாஸ்திரீய நடன நிலையில் காணப்படுகின்றாள்.

இலங்கையில் புராதன சிவாலயங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் முதலியனவற்றிலே இருந்திருக்கக்கூடிய நடன சிற்பங்கள் பெரும்பாலும் இன்று கிடைத்தில. கி.பி. 1344 இலே இலங்கைக்கு வந்த மொறொக்கோ தேசபிரயாணியான இபின்பட்டுட்டா, தேவிநுவரயில் இருந்து பெரிய விஷ்ணு கோவில் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அங்கு கிரியைகளின்போது இறைவனுக்கு முன் பாடுவதற்கும், ஆடுதற்குமாகச் சுமார் 500 மாதர் (தேவரடியார்) இருந்தனர் எனக்குறிப்பிட்டுள்ளார்.

### (vi) நாடகம் காவியமாகியவற்றில் நடனம்.

நாட்டிய சாஸ்திர மரபையொட்டிய சம்ஸ்கிருத நாடகங்கள் இலங்கையிலே கிடைத்தில எனலாம் வடமொழி காவியங்களிலொன்றான ஜானகீஹரணத்தை இலங்கையைச் சேர்ந்த குமாரதாசர் இயற்றினார். இதிலே இசை, நடனம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இதைவிட மேலும் சில வடமொழி நூல்களிலும் இசை, நடனம் பற்றிய குறிப்புகள் உள்ளன

கி.பி. 14ம் நூற்றாண்டு தொடக்கம் சிங்கள் மொழியில் எழுதப்பட்ட சந்தேச (தூது) நூல்களிலேதான் அரச அவைகளிலும், இந்துசமயத் தெய்வங்களின் முன்பும் இடம்பெற்ற நடன வருணனைகள் வருகின்றன. டெடிகமவில் இருந்து ஆட்சிபுரிந்த ஐந்தாம் பராக்கிரமபாகுவின் அரண்மனையிலே இடம்பெற்ற நடனங்களைப்பற்றித் திசரசந்தேசய எனும் (காவியம்) நூல் விபரிக்கின்றது. களனியில் இருந்த விபீஷணனின் தேவாலயத்தில் ஆடன் மகளிர் "கைவழிநயனம் செல்ல" ஆடுதல் பற்றி சேலலிஹினிசந்தேசய (தூத காவியம்) குறிப்பிடுகின்றது. பெரெலிசந்தேசயத்திலே ஸ்ரீராகுலர் நாட்டியகரணம் பற்றியும், நடன மாதின் அங்க அசைவுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நூல்களிலேவரும் நடனம் பற்றிய குறிப்புகள், வருணிக்கப்பட்டிருக்கும் நடனக்காட்சிகள் முதலியனவற்றின் அடிப்படையிலே நோக்கும்போது பரதரின் நாட்டிய சாஸ்திரமரபு இக்காலப்பகுதியில் இங்கு பின்பற்றப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. இங்கு பெரும்பாலும் பரதநாட்டியமே இடம்பெற்றிருக்கலாமெனக் கருதப்படுகின்றது. நேசம், அபிநயம் முதலியவை நாட்டிய சாரஸ்திர மரபையொட்டியவை. பரதநாட்டியம் போன்று பெண்கலைஞரே இவற்றை ஆடினர். மேலும் இங்கு கதக்களியோ அல்லது கண்டி நடனமோ இடம்பெற்றதற்குத் தக்க சான்றில்லையெனவும் பரதநாட்டியமே இடம்பெற்றிருக்கும் என்பதே சரியான கருத்து எனவும் பேராசிரியர் சரச்சந்திரா சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் தென்னிலங்கையில் இந்நடனம் போர்த்துக்கீசர் ஆட்சியின்போது மங்கிவிட்டதாகத் தெரிகின்றது. இது பொரும்பாலும் நகரங்களிலேதான் நிலவியதாகக் கருதப்படுகின்றது.

### (vii) நடனம்

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் நடனக்கலையிலே நாட்டிய சாஸ்திர மரபின் தாக்கம் உண்டு எனலாம். பொலநறுவ, தேவிநுவர போன்ற இடங்களிலிருந்த சைவ, வைஷ்ணவக் கோயில்களிலே "தேவரடியார்" இருந்து இசை, நடனப்பணிகள் செய்தமைக்குச்

சான்றுகள் உள்ளன. கந்தளாயில் இருந்த விஜயராஜ ஈஸ்வரம் கோயிலிலே ஏழுதேவரடியார்களும், தேவிநுவரயில் இருந்த விஷ்ணு கோயிலிலே ஐந்நூறு தேவரடியார்களும் கலை, சமயப்பணிகள் புரிந்தனர் என அறியப்படுகின்றது. ஒப்பீட்டுரீதியில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன கோயில்களிலும் தேவரடியார் இருந்திருப்பார்கள் எனலாம்

யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட வையாபாடல், கைலாயமாலை முதலிய நூல்களிலே ஆடல், பாடல் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. எனவே இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த அரசசபையிலும், கோயில்களிலுமாவது தேவரடியார் இருந்து கலை, சமயப் பணிகள் புரிந்திருப்பர் என்பது சமகாலச் சிங்கள் இலக்கியத்துடனும், சமகால இலங்கையின் பிறகோயில்களுடனும் தமிழகக் கோயில்களுடனும் ஒப்பிட்டு நோக்குகையில் ஏற்கக்கூடியதாகும். மேலும் கி.பி 16ம் நூற்றாண்டு தென்மேற்கு இலங்கையிலே நிலவிய கோட்டை அரசில் இருந்து ஈஸ்வரம் (சிவன்) கோயிலிலே தமிழ்ப் பக்திப்பாடல், தேவாரம் பண்ணிசையுடன் பாடும் சம்பிரதாயம் இடம்பெற்றதாகச் சமகாலச் சிங்களத் தூது இலக்கியம் கூறும். இசையுடன் நடனமும் அங்கு இடம்பெற்றிருக்கலாமெனக் கொள்ள இடமுண்டு.

## (viii) இலங்கையில் நாட்டியசாஸ்திர மரபு வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தோர்.

கி.பி. 19ம் நூற்றாண்டு காலத்தில் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த கனகி எனும் தேவதாசி வண்னை வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரு நர்த்தகியாகவும் விளங்கினார். ஆனால் இக்காலச் சூழ்நிலையின் பின்னணியால் ஆறுமுகநாவலர் போன்றோரின் கண்டனத்திற்கு இவ்வாறானோர் ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது. எனினும் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோயில்களிலே இசைபோன்று நடனமும் ஒழுக்கமுள்ள கலைஞர்களால் நடாத்தப்படுதை ஆறுமுகநாவலர் போன்றோர் வரவேற்றனர் எனக்கூறமுடியும். சில தேவதாசிகள் தமிழ் நாட்டிலிருந்து இங்குவந்து கோயில்களிலே நர்த்தனம் புரிந்து சென்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நர்த்தனம் புரிவதற்காக சில வணிகர், தரகர் முதலியோரால் வரவழைக்கப்பட்டனர். சிலர் இங்கு தொடர்ந்தும் வாழ்ந்தனர். வண்ணார்பண்ணை, இணுவில், நல்லூர், மாவிட்டபுரம், அளவெட்டி, தெல்லிப்பளை போன்ற இடங்களில் அவர்கள் வசித்து வந்தனர். நடனக்கலையில் மட்டுமன்றிப் பரதசாஸ்திரத்திலும் தேர்ச்சியுள்ள அறிஞர் சிலர் இங்கு வாழ்ந்தனர். கி.பி. 17ம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டில் வாழ்ந்த பிரபல நாட்டிய கலைஞராகிய கங்கை முத்துப்பிள்ளை (தஞ்சை நால்வரின் பாட்டனார்) எழுதியுள்ள பரதசாஸ்திர நூல்களில் ஒன்றான் நடனாதி வாத்யரஞ்சனம் எனும் நூல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணநாவலர் முன்னிலையிலே பரிசோதித்துத் தமிழ் நாட்டிலே 1893 இலே பிரசுரிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

மேலும் இந்த நூற்றாண்டின் முப்பதுகளிலே பரதக்கலை மறுமலர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்களிலே கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியும் ஒருவராவர். ஒழுக்கமும் சமயப்பற்றும் உள்ள திருவாரூர் "ஞானம்" எனும் நடனமாது இவருக்கு நடனக்கலைபற்றி அறிவுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது. நடன மாணவர்கள் கற்கவேண்டிய நந்திகேஸ்வரின் அபிநயதர்ப்பணம் எனும் நூலிற்கு இவர் துர்க்கிராலா எனும் அறிஞரோடு சேர்ந்து ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றனை 1917ல் நியூயோர்க்கிலே வெளியிட்டார். இதனால் ஆங்கிலம் கற்ற இலங்கையர், இந்தியர் மட்டுமன்றி, வேற்றுநாட்டவரும் இந்திய இலங்கை நடனக்கலையின் சிறப்பினை அறியவும், கற்கவும் தூண்டப்பட்டனர்.

மேலும் கலாயோகி அவர்கள் இந்திய, இலங்கைக் கலைகளைப்பற்றி ஆராய்ந்து விரிவுரைகள் ஆற்றியும், எழுதியும் இந் நாட்டுமக்கள் தத்தம் கலைகளின் சிறப்பினையும்

பெருமையையும் அறிந்து வியப்படையவும், விழிப்படையவும் செய்தார். தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கூட பரதக்கலை மறுமலர்ச்சி அடைவதற்கும் இவர் அயராது உழைத்தவர் எனலாம். மரபுவழிக் கலைஞராகிய தேவதாசிகள் இழிகுலத்தவரன்றி, உள்ளார்ந்த சமூக நிலைக்குரியவரெனும் கருத்தினை முன்வைத்துக் கட்டுரைகள் எழுதினர். 1918ல் இவர் வெளியிட்ட சிவநடனம் எனும் கட்டுரைத் தொகுப்பு குறிப்பிடற்பாலது. இந்நூலிலுள்ள சிவநடனம், இந்திய இசை, பரதக்கலை பற்றிய கட்டுரைகள் முக்கியமானவை. சுவாமி விபுலானந்தர் பண்ணிசை, கர்நாடக இசை குறிப்பாக யாழ் ஆகியன பற்றி மட்டுமன்றிப் பரதம் பற்றியும் எழுதியுள்ளர். 1942ல் மதுரையிலே நடைபெற்ற இயற்றமிழ் மகாநாட்டுத் தலைமைப் பேருரையிலே பரதம் எனும் பதத்திற்கு சுவாமி விபுலானந்த அடிகளார் கொடுத்த விளக்கம் பரதக்கலை வரலாற்றில் முக்கியமானது. "பண், இரதம், தாளம் எனும் மூன்றும் அடங்கிய பிண்டம் பதம் எனவாகும்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலே 1947ம் ஆண்டு தேவதாசிச்சட்டம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து கோயில்களிலே தேவதாசிகள் நடனமாடுதல் தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாகப் பல நூற்றாண்டுகளாகக் கோயில்களில் இடம்பெற்றுவந்த சதிர் அல்லது பரதநாட்டியம் பொதுமன்றங்களிலும் வேறு அரங்குகளிலும் இடம்பெறலாயிற்று. இப்போக்கு தமிழ் நாட்டிலே மட்டுமன்றி இலங்கையிலும் ஏற்படலாயிற்று. எனினும் 1947க்குப் பின்பும் தேவதாசிகள் சிலர் நடனமாடி வந்தனர்.

தமிழகத்திலேற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சியைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலே பரதக்கலை மறுமலர்ச்சிக்குப் பங்களித்தோர்களிலே திரு. ஏரம்பு சுப்பையா, திரு.எம்.எஸ்.பரம், கலைப்புலவர் நவரத்தினம், திருமதி. மகேஸ்வரி நவரத்தினம், திரு. வீரகத்தி, திரு. எஸ்.ஆர். இராசநாயகம், கலையரசு சொர்ணலிங்கம் முதலியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்குச் சென்று பிரசித்தி பெற்ற நிறுவனங்களில் பரதக்கலை பயின்ற பல கலைஞர்களும் நாட்டிய சாஸ்திர மரபுகளையும் இக்கலைகளையும் வளர்க்கத்தவறவில்லை.

## (ix) நாட்டியசாஸ்திர மரபு வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்யும் நிறுவனங்கள்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களிலே தனிப்பட்ட கலைஞர் கூட்டங்களிலும், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு கலை நிறுவனங்களிலும் பரதக்கலை இன்று உயர்ந்த நிலையிலே போதிக்கப்படுகின்றது.

இவற்றுள்ளே நிறுவனரீதியாக இயங்குவனவற்றிலே யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் (இளநிலைப் பட்டப்படிப்பு நிலையிலும் உயர் பட்டப்படிப்பு நிலையிலும்) ஆகியவற்றில் நடனம் நன்கு கற்பிக்கப்படுகின்றன.இவை தவிர வட இலங்கை சங்கீதசபை, கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம் கல்வியற்கல்லூரி முதலியன குறிப்பிடற்பாலன. நடனம் ஒரு பாடமாக ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக் கல்விக் கூடங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கத் தொடங்கிய பின்பு இதனைக் கற்போர் தொகை அதிகரித்து வருகின்றது.

மேலும் இலங்கையிலே தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றிலே நடனநிகழ்ச்சிகள், கருத்துரைகள் இடம்பெற்று வருகின்றன. பாடசாலைகளிலே நடனப் போட்டிகள் நடைபெற்று இளம் நடனக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். பல்கலைக்கழக மட்டத்திலே நடனநிகழ்ச்சிகளும், நடனக் கலைகள் பற்றிய பல்வேறு ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இந்துசமய, கலாசார அமைச்சும் இசை, நடன நிகழ்ச்சிகளையும், கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றது. இலங்கையைச் சேர்ந்த பரதக்கலைஞர்கள் சிலர் வெளியே பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, மலேசிய, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இக்கலையினைக் கற்பிக்கின்றனர். இலங்கையில் உள்ள சிங்கள கலைஞர்களும் இதனை விரும்பி கற்றும், கற்பித்தும், அரங்கேற்றியும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## முடிவுரை

இதுவரை கூறியுள்ளனவற்றைத் தொகுத்து நோக்கும்போது "நாட்டியம்" என்ற சொல் பொதுவாக நாடகம் என்ற கருத்திலும், சிறப்பாக நடனம் என்ற கருத்திலும் வந்தாலும், மிகவும் பரந்த கருத்தினைத் தன்னுள்ளடக்கியுள்ளமை நன்கு புலனாகும். தென்னாசியாவுக்கே பொதுவான ஒரு நாட்டிய சாஸ்திர மரபு நிலவி வந்துள்ளது என்பதனையும், இலங்கையில் குறிப்பிடத்தக்களவு நாட்டிய சாஸ்திர மரபு நன்கு நிலவியுள்ளது என்பதனையும் தெளிவாக அறியமுடிகின்றது. இதன் தாக்கம் கவிதை, காவியவியல், நாடகம், நடனம், இசை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலே பல்வேறு அளவுகளிலும், மட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது என்பது நன்கு புலனாகின்றது. உயர் கல்வி நிறுவனங்களும் இம்மரபுக்கும், கலைக்கும் முக்கியமான இடத்தினை அளித்து வருவதை காணலாம்.

## REFERENCES

### ORIGINAL SOURCES.

Bharata, **Natyasastara with the commentary of Abhinavagupta**, **Vols i - iv** Ed. by Ramakrishnakavi M. Jade J.S. Baroda 1926 - 1964 Eng. Tr. by Manomohan Ghosh Vols. 1-11 Calcutta 1950 - 1956

Coomaraswamy. A.K. and Duggirala (Eng. Tr.) **The Mirror of Gesture**, New Delhi 1970

Nandikeswara, 1975 **Abinayadarpanam**, Ed, with Eng. Tr. by Manomohan Ghosh Culcutta

Sarangadeva, **Sangitaratnakara with the commentary of Simhabhupala and Kallinatha** Ed. by. S. Subramanyasastri, Madras 1943-1959

### SECONDARY SOURCES.

Ambrose kay, 1980 **Classical Dances and Costumes of India**, New Delhi

Kale Promode, 1974 **The Theatric Universe**, Bomby

Keith. A.B. 1954 **Sanskrit Drama**. Oxford

Kothari Sunil (Ed).1979 **Bharatha Natyam**. Bombay

Ramakrishna Kavi, 1983 **Bharatha Kosa**, Tirupati

Rangaramanuja Ayyankar, 1972 **History of South Indian (Carnatic) Musis**, Poona

Sivaramamurthi.C. 1974 **Nataraja in Art, Thought and Literature**, Niw Delhi

Varadpande.M.L. 1981 **Ancient Indian and Indo - Greek Theatre**, Niw Delhi

Majumdar, R.C.1979 **India and South East Asia Delhi**,

Nilakanta Sastri.K.N. 1949 **South Indian Influences in the far East Bombay**

Wales.H.G.Q. 1951 **The Making of Greater India. London**

தமிழ்

அறம் வளர்த்தான், பரதசங்கிரகம்.(தி.க.வெள்ளை வாரணன் பதிப்பு)அண்ணாமலை நகர்
அறிவனா, 1965 பஞ்சமரபு மூலமும் உரையும் (வே.ரா.தெய்வசிகாமணிக்கவுண்டர் பதிப்பு) கும்பகோணம்
இளங்கோவடிகள், 1942 சிலப்பதிகாரம் (ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரையுடன்) சென்னை
சாம்பமூர்த்தி.பி. 1953(பதிப்பாசிரியர்) பரதசித்தாந்தம, சென்னை
விசுவாநாதையர்.ரா. 1955 மகாபரதசூடாமணி எனும் பாவராகதாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம, சென்னை 1955
திருநாவுக்கரசு.க.த. 1978 தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, சென்னை